ந.க.எண்.6534/2019/வ1, நாள்: 27.07.2021

மாவட்ட வன அலுவலகம்,
திண்டுக்கல் வனக்கோட்டம்,
திண்டுக்கல்.

பொருள் :- NHAI - நத்தம் வனச்சரகம் - நத்தம் முதல் துவரங்குறிச்சி வரை நான்கு வழிச்சாலை விரிவாக்கப் பணிகளுக்காக சின்னயம்பட்டிகரடு காப்புக்காட்டில் வன நிலம் நிர்ணயம் செய்தல் - தேவாங்குகள் வாழ்விடம் மற்றும் இடம்பெயர்வு குறித்த அறிக்கை விபரம் கேட்டல் - தொடர்பாக.

பார்வை:- தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல் ந.க.எண்:6310/2019/வ1 நாள்:22.07.2021.

******

மேற்காணும் பொருள் தொடர்பாக, நத்தம் வனச்சரகம், நத்தம் முதல் துவரங்குறிச்சி வரை தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளுக்காக, சின்னயம்பட்டிகரடு காப்புக்காடு பகுதியில் 3.708 ஹெக்டேர் நிலம் தேசிய நெடுஞ்சாலை துறைக்கு வழங்குதற்கு அரசிற்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேவாங்குகளின் நடமாட்டம் உள்ளதாக தலைமை வனப்பாதுகாவலர் அவர்களால், தெரிவிக்கப்பட்டு, பார்வையில் கண்டுள்ள தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல் அவர்கள் கடிதத்தில் மேற்படி தேசிய நெடுஞ்சாலை துறைக்கு வழங்கவிருக்கும் பகுதிகளில் தேவாங்குகளின் வாழ்விடம் மற்றும் இடம்பெயர்வு குறித்த ஆய்வு அறிக்கையினை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நத்தம் முதல் துவரங்குறிச்சி வரை நான்கு வழிச்சாலை விரிவாக்கப் பணிகளுக்காக சின்னயம்பட்டிகரடு காப்புக்காட்டில் நெடுஞ்சாலை துறைக்கு வழங்கவிருக்கும் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு, தேவாங்குகளின் வாழ்விடம் மற்றும் இடம்பெயர்வு குறித்த ஆய்வு அறிக்கையினை சமர்ப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-ப.கொ.திலீப்,
மாவட்ட வன அலுவலர்(கூ/பொ),
திண்டுக்கல் கோட்டம், திண்டுக்கல்.

பெறுநர்

இயக்குநர், SEEDS Trust, திண்டுக்கல்.

/உண்மை நகல்/

3/9/21

வரைதொழில் அலுவலர்க்காக.